பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

UTHAYAN

விலை ரூபா 4.00

சுடர்: 5 பிரமோதூத ஆண்டு கார்த்திகை மீ 05 உ புதன்கிழமை (21 11 1990) ஹிஜ்ரி 1410 ஆகிர் 11 கதிர் 259

★ சுதந்திரம் ★ பாதுகாப்பு ★ கௌரவ வாழ்வு

# இலட்சியம் நிறைவேறுவதற்கு இரத்தம் சிந்தியாக வேண்டும்

## மாவீரர் தினத்தையொட்டி பிரபா

யாழ்ப்பாணம், நவம்பர் 21

எமது தாய் நாடு விடுதலை பெறவேண்டும்; எம்மைப் பிணைத்திருக்கும் அடிமை விலங்குகள் உடைத்தெறியப்பட வேண்டும்; எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டும்; இந்த இலட்சியம் ஈடேறவேண்டுமாயின் நாம் போராடித்தான் ஆகவேண்டும்; இரத்தம் சிந்தித்தான் ஆகவேண்டும்; மரணத்தின் நிழலில் வாழத்தான் வேண்டும்.

நாம் ஓர் இலட்சிய விதையை விதைத்திருக்கிறோம். அதற்கு எமது வீரர்களின் இரத்தத்தால் நீர் பாய்ச்சி வளர்க்கிறோம். அந்த விதை வளர்ந்து விருட்சமாகி எமது மாவீரர்களின் கனவை ஒரு நாள் நனவாக்கும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன்.

மாவீரர் தினத்தை ஒட்டி அவர் விடுத்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: -

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே!

தமிழீழ தேசிய சுதந்திரப் போரில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட எமது விடுதலை வீரர்களின் இரண்டாம் ஆண்டுநினைவுநாளாக எதிர்வரும் 27 ஆம் திகதி நினைவுகூரப்படுகிறது. இதுவே எமது தேசிய தினமுமாகும்.

எமது வீரசுதந்திர வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டிருக்கிறது.



இவர்களது இறப்புக்கள் அர்த்தமற்ற இழப்புக்கள் அல்ல:

இந்த வீரர்களின் சாவுகள் எமது சரித்திரத்தையே இயக்கும் உந்து சக்தியாக, எமது போராட்டத்தின் உயிர் மூச்சாக, எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகமளிக்கும் ஊக்குசக்தியாக அமைந்துவிட்டன.

இந்த மாவீரர்கள் காலத்தால் சாகாத சிரஞ்சீவிகள்; சுதந்திரச் சிற்பிகள்; எமது மண்ணிலே ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீரமறவர்கள்;

எமது இனத்தின் சுதந்திரத்திற்காக, கௌரவத்திற்காக, பாதுகாப்பிற்காக தமது இன்

(6ஆம் பக்கம் பார்க்க)

## இன்று முதல் மாவீரர் வாரம்; குடாநாடு பெரு விழாக்கோலம்

யாழ்ப்பாணம், நவ. 21

இன்று புதன்கிழமை மாவீரர் வாரம் ஆரம்பமாகிறது: அதனையொட்டி குடாநாடு எங்கும் விழாக்கோலம் பூண்டுள்ளது.

இன்று காலை 9 மணிக்குக் கொடியேற்ற வைபவங்களுடன் மாவீரர் வாரம் ஆரம்பமாகிறது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களிலும் மாவீரர் வாரத்தை விமரிசையாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பிரதான வீதிகளிலும், முக்கிய இடங்களிலும் அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

அலங்கார வளைவுகளில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தைச் சித்திரிக்கும் சமகால ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. வீதிகள் அனைத்தும் சிவப்பு, மஞ்சள் நிறக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

யாழ். கோட்டையை நினைவுபடுத்தும் வகையிலும் அலங்கார வளைவுகள் காணப்படுகின்றன.

(ஓ-8-6)

## மீண்டும், மீண்டும் வந்த பொம்மர்கள் உரும்பராயில் கர்ண கொடூரம்

### தம்பதியர் பலி; வீடுகள் பல சேதமுற்றன

உரும்பராய், நவ. 21

உரும்பராய்ப் பகுதியில் நேற்று வெவ்வேறு சமயங்களில் 3 தடவைகள் வந்த பொம்மர்கள் கண்மூடித்தனமாக இப்பகுதிகளில் குண்டுகளை வீசித் தாக்கின.

காலை சுமார் 7-45 மணிக்கு முதல் தடவையாக குண்டு வீச்சுக்கள் ஆரம்பமாகின.

அடுத்து முற்பகல் 10-30 மணியளவிலும், நண்பகல் 12-30 மணியளவிலும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நேற்றைய குண்டுவீச்சுக்களின்போது வயோதிபத் தம்பதியர் துடிதுடித்துப் பலியாகினர்: இருவர் காயமடைந்தனர். வீடுகள் பல சேதமடைந்தன. வலிகிழக்கு பிரதேசசபை உப அலுவலகம், சைவத் தமிழ் மகாவித்தியாலயம் என்பனவும் சேதமுற்றன.

[illegible] முதல் தாக்குதல் [illegible] முதல் தாக்குதல் உரும்ப[illegible]

(6ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் பரவலாக நேற்று ஹெலித் தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 21

குடாநாட்டில் நேற்றுப் பரவலாக பல பகுதிகளிலும் ஹெலிகள் தாக்குதல்களை நடத்தின.

வீதிகளில் வாகனங்களின் நடமாட்டத்தைக் கண்டவுடன் ஹெலிகள் தேடித் தேடி வேட்டுக்களைத் தீர்த்தன; பல இடங்களில் சன்னங்கள் பாய்ந்து துளைத்ததால் வீதிகளில் வரிசையாக அடையாளங்கள் காணப்பட்டன.

நல்லூர், முத்திரைச் சந்தை, திருநெல்வேலி, கைதடி மற்றும் பல பகுதிகளிலும் ஹெலிகள் தமது "கெட்டித்தனத்தை"க் காட்டின.

இதேவேளை—

குடாநாட்டிலும் மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் நேற்று ஹெலிகள் பரவலாகத் துண்டுப் பிரசுரங்களை வீசின.

(ஓ-5-6)

## பொருள் இறக்கும் வேலை பருத்தித்துறையில் நிறுத்தம்

யாழ்ப்பாணம், நவ. 21

நேற்று நிலவிய சூழ்நிலையை அடுத்து பருத்தித்துறையில் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் தடைப்பட்டுள்ளன.

குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து ப. நோ. கூ. சங்கங்களின் லொறிகள் அங்கு சென்று பொருள்களை ஏற்றி வருவதும் தடைப்பட்டுள்ளது.

இதனை அடுத்து பொருள்களை இறக்கும் பணியைத் தொடர்வதற்காக அனுமதி கேட்டு செஞ்சிலுவைச் சங்கத்தினர் கொழும்பு தலைமையகத்துடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

இது சம்பந்தமாக யாழ். அரச அதிபரும், அத்தியாவசிய சேவைகள் நாயகத்துடன் இன்று தொடர்பு கொள்ள இருக்கிறார்.

(ஓ-6)

## 4 சிங்கள ஊர்காவலர்கள் தாக்குதலில் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ. 21

நேற்று முன்தினம் மணலாறில் உள்ள சூரியனாறில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஸ்ரீலங்கா அரசின் ஐந்து ஊர்காவல் படையினர் மீது தமிழீழ மக்களின் ஊர்காவல் படையினர் தாக்குதல் மேற்கொண்டதில் 4 சிங்கள ஊர்காவலர்கள் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்; ஒருவர் காயங்களுடன் தப்பி ஓடினார்.

—இவ்வாறு விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலின்போது

(6ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவ காவல் அரண் மீது கல்லடியில் புலிகள் தாக்கு

யாழ்ப்பாணம், நவ. 21

கடந்த ஞாயிறன்று இரவு 8-45 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டம் கல்லடியில் உள்ள இராணுவமுகாமின் காவல் அரண் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் 'கால்கஸ்ட்ரோ' தாக்குதலும் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதலில் ஒரு சிப்பாய் உயிரிழந்ததாகவும் பல படையினர் படுகாயமுற்றதாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ)

## சாவகச்சேரியிலும் நேற்று பொம்மர்கள் குண்டு வீச்சு!

சாவகச்சேரியிலும் நேற்றுக் காலை சுமார் 10 மணியளவில் பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

முதலில் கண்டிவீதி பேக்கரி ஒன்றுக்குச் சமீபமாக இரு குண்டுகள் வீசப்பட்டன. இதனால் இந்தப் பகுதியில் சில வீடுகள் சேதமடைந்தன. இருவர் காயமடைந்தனர்.

அடுத்து, சங்கத்தானைப் பகுதியிலும் குண்டுகள் வீசப்பட்டன.

(ஓ-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நத்தார், புதுவருட வாழ்த்துக்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) "மண்டேலா ஸ்டோர்" இல. 256, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (14550)

## "பூஜைக்காக வாழும் பூவை"

மீரா வெளியீடு K. S ஆனந்தன் எழுதியது குடும்பத்தில் தோன்றும் அலைத்துப் புயலுக்கும் அசையாது நிற்கும்பெண்ணொருத்தியின் புனித வாழ்க்கையைச் சித்தரிக்கும் நாவல் விற்பனையாகிறது துர்க்கா ஸ்டேசனேர்ஸ் சுன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி ஸ்ரீ ஆனந் புத்தகசாலை நல்லூர். (14805)

## சலவைப்பவுடர்

துரித சலவைக்கும் பளிச்சிடும் வெண்மைக்கும் மில்க்வைற் சலவைப் பவுடர், 50 கிறாம் பவுடர் தனிப்பைக்கற் ரூ 3 00 1டசின் ரூ. 33. 00 100 வெற்றுப் பைக்கற் ஒரு அழகிய லேஞ்சியை அன்பளிப்பாகப் பெற்றுத் தருகிறது மில்க்வைற் யாழ்ப்பாணம். (சி/5445)

## மூக்குப் பொடி

மிகத்தரமான காரம், மணம், குணம் நிறைந்த மூக்குப்பொடி சாதாரண வாசனையூட்டிய வகைகளில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். விலாசம்:- V K தேவகுருநாதன் 142, ஆடியபாதம் றோட், (கலியாண்காடு சந்தையில் இருந்து 75 யார் தூரத்தில் உள்ளது.) யாழ்ப்பாணம். (14792)

## கல்வி

இலைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் பாடசாலை மாணவர்களிலிருந்து அரச கூட்டுத்தாபனங்களில் வேலை செய்வோர் வரையிலானவர்களுக்கு ஆரம்ப அறிவிலிருந்து ஆங்கிலம் தனிப்பட்ட முறையில உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். விபரங்களுக்கு (நேரில் அல்லது கடிதமூலம்) S. ஜெயராஜா, 204 மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (14809)

## FUDO

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் - விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும் FUDO, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் கிளை: பிரதான வீதி, மானிப்பாய். (C/5398)

## தவறிவிட்டது

எனது இலங்கை வங்கி காசோலை சுன்னாகம் கிளை எனது வீட்டிற்கும் சுன்னாகம் சந்திக்குமிடையில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் தயவு செய்து உடன் தந்து உதவுமாறு வேண்டுகிறேன். சோ. சசிகரன் (சசிஐயா) ஐயனார் கோவில் வீதி சுன்னாகம். (14817)

## தட்டுப்பாடு

தென்மராட்சி, நவ. 21 யாழ். மாவட்டத்தில் சைக்கிள் உதிரிப்பாகங்களுக்குப் பெருந் தட்டுப்பாடு நிலவுகிறது. [இ-117]

# பல்கலைக்கழக புலமைப்பரிசில்; வருமான எல்லை அதிகரிப்பு

கொழும்பு, நவ. 21 பல்கலைக்கழக புலமைப் பரிசில் பெறுதற்கான வருமான எல்லை அதிகரிக்கப் பட்டுள்ளது.

ஆண்டு ஒன்றுக்கு 36 ஆயிரம் ரூபாவுக்குக் குறைவான வருமானம் பெறும் குடும்பத்தைச் சேர்ந்த பல்கலைக் கழக மாணவரும் இனி புலமைப் பரிசில் பெறத் தகுதி உள்ளவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 28 ஆயிரம் ரூபா ஆண்டு வருமானமாகப் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவரே புலமைப் பரிசில் பெறத் தகுதி பெற்றிருந்தனர். (இ-எ)

## பங்கீட்டு அட்டை விநியோகம் நயினாதீவில் தாமதமாகும்

புங்குடுதீவு நவ 21 வேலணை உதவி அரசாங்க அதிபரின் கீழ் உள்ள பகுதிகளுக்கு புதிய பங்கீட்டு அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றபோதிலும் நயினாதீவுக்கு புதிய பங்கீட்டு அட்டைகள் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

பங்கீட்டு அட்டைகள் பற்றாக்குறையே இதற்குக் காரணம் ஆகும்.

வேலணை உதவி அரசாங்க அதிபரின் கீழ் உள்ள பகுதிகளுக்கு 13 500 பங்கீட்டு அட்டைகள் தேவைப்படுகின்றன ஆனால் 11,500 பங்கீட்டு அட்டைகளே அனுப்பப்பட்டுள்ளனவாம்.

குறைவாக உள்ள 2 000 பங்கீட்டு அட்டைகள் கிடைத்த பின்பே நயினாதீவுப் பகுதிக்கான புதிய பங்கீட்டு அட்டைகள் விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-131]

## உணவு முத்திரைப் பொருள்

அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 3 ஆம் கட்ட தொழிற்பதிப்பு நிவாரணம், இடம் பெயர்ந்தோர் 4 ஆம் கட்ட நிவாரணம், 1 500 ரூபாவுக்கு மேற்பட்ட வருமானமுடையோரின் 3 ஆம் கட்ட நிவாரணம் ஆகியவற்றை புதிய பங்கீட்டு அட்டைக்கு விநியோகிக்கின்றது.

அத்துடன் 4 ஆம் இலக்க உணவு முத்திரைக்கும் பொருள்களை விநியோகித்து வருகின்றது.

சங்கத் தொழிற் பரப்பிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் 4 ஆம் இலக்க உணவு முத்திரைக்கான பொருள்களை 25 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ள வேண்டுமென பொதுமுகாமையாளரால் கேட்கப்பட்டுள்ளது. (இ-15]

## கேரதீவுப் பாதை பாவனை குறைந்தது

தென்மராட்சி, நவ 21 கிளாலியிலிருந்து பூநகரிக்கு படகுச் சேவை ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து கேரதீவு இறங்குதுறை ஊடாக பூநகரி செல்வோரின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

தினமும் நூற்றுக்கணக்கான பயணிகளும் சைக்கிள் வியாபாரிகளும் கிளாலி படகுச்சேவையைப் பயன்படுத்துகின்றனர். (இ 117)

## சீனி மூடையுடன் யூரியா

கோப்பாய், நவ. 21 சீனி மூடைகளுடன் யூரியா மூடைகளையும் ஏற்றிவந்ததாகக் கூறப்படும் லொறியொன்று சில வவுனியாவில் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது.

லொறிச் சாரதிகள், கிளீனர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனராம். (இ - 72)

# University of Jaffna, Faculty of Agriculture, Kilinochchi

Applications will be received by me from suitable candidates for the following post upto 1990-11-27

**Temp. Demonstrator In Agricultural Chemistry**

**Salary Scale:**

Temp Demonstrator: 3,250/- p m (Fixed)

**Qualifications Temporary-Demonstrator**

A graduate or person awaiting results of a Final / Degree-Examination

Applicants are requested to apply together with their Bio datas. Qualified applicants are also requested to present for an interview scheduled to be held on 1990-11-28 at 10.00 a m in the Board Room of this University.

– REGISTRAR.

University of Jaffna,
Thirunelvely,
Jaffna
1990-11-19.

(C-5[illegible])

## தற்காலிக செய்முறைக்காட்டுனர் மருத்துவபீடம்

மருத்துவ பீடத்தில் உள்ள Pre and Para Clinical துறைகளில் செய்முறைக்காட்டுனராகக் கடமையாற்றுவதற்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1990 - 11 - 30 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலும் விண்ணப்பதாரர்களை 1990-12-06 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சபை அறையில் நேர்முகப் பரீட்சைக்காக சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்,

**பதிவாளர்.**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
1990– 11– 19.

# 31 ஆம் நாள் 'நினைவஞ்சலி



தோற்றம்: 07 | 06 | 1987

மறைவு; 22 | 10 | 1990

செல்வன்

## சத்தியநாதன் அட்சயன்

உன் நினைவுகளிலிருந்து மீள முடியாமல் தவிக்கும்.

அம்மா, அப்பா, அண்ணா, உறவினர்

வளராய் & [illegible] (14819)

# மரண அறிவித்தல்கள்

## வள்ளிப்பிள்ளை - வேலுப்பிள்ளை

திருமதி வள்ளிப்பிள்ளை - வேலுப்பிள்ளை 18 - 11 - 90 திங்கட்கிழமை சிவபதமெய்தினார். அன்னார் காலஞ்சென்ற சின்னட்டியர் வேலுப்பிள்ளை (பறையகாடு) அவர்களின் அன்பு மனைவியும், சரஸ்வதி, சரவணமுத்து, நவரத்தினம், திருநாவுக்கரசு பூமாதேவி, பொன்னம்பலம், இராசலட்சுமி, சந்திரதேவி ஆகியோரின் அன்புத்தாயாரும், சண்முகம், இராசையா, நவரத்தினம், யோகேஸ்வரன், விஜயலட்சுமி, சிவேஸ்வரி, சாந்தகுமாரி, சாந்தா ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 20-11-90 செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. உற்றார், உறவினர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே. நவரத்தினம் (மகன்)

தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி. (14820)

திருமதி

## ஐயாத்துரை - மரியம்மா

அச்சுவேலி சூசையப்பர் கோவிலைச் சேர்ந்த திருமதி ஐயாத்துரை மரியம்மா 20-11-90 காலமாகிவிட்டார். இவர் காலம் சென்ற பொன்னையா ஐயாத்துரையின் அருமைமனைவியும், வினிபிறெட் (வவுனியா), இராசாத்தி (இந்தியா), மேரி திரேசா [அச்சுவேலி], மேரி நல்லம்மா (அச்சுவேலி, அருட்சகோதரி புனிதம் [மரவெட்டி], ஜெயறட்ணம் [உருத்திரபுரம்], சேவியர் (பெரியகம்பனை), இராசேஸ்வரி (பண்டிவிரிச்சான்), சந்திரசேகரா [கனடா] ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு செபஸ்ரியாம்பிள்ளை, காலஞ்சென்ற திரு எட்வின் சவரிமுத்து, காலஞ்சென்ற அன்ரன் இராஜரட்ணம் திரு J. P. சிங்கராயர், திருமதி. இராணி, திருமதி அமலோற்பவம், திரு நீக்கிலஸ் [பிரான்ஸ்], திருமதி லக்கி [கனடா] ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

இவரின் நல்லடக்கம் இன்று [20-10-1990] அர்ச். சூசையப்பர் சேமக்காலையில் மாலை 5 மணிக்கு நடைபெற்றது என்பதை அறியத்தருகிறோம்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்வார்களாக.

தகவல்:
திரு. J. P. சிங்கராயர் (மருமகன்)

(14658)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### மாவீரர் வாரம்

தமிழ்ப் பகுதிகளில் மாவீரர் வாரம் இன்று ஆரம்பமாகிறது. இறுதி நாளான 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நினைவு நிகழ்ச்சிகள் விமரிசையாக நடப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கத்தியின்றி, இரத்தமின்றி அகிம்சை யுத்தம் நடத்திச் சுதந்திரம் பெற்ற நாடுகள் தேசிய வீரர் தினங்களைக் கொண்டாடுவதைப் பார்க்கிறோம் யுத்தங்களில் உயிர் ஈந்த வீரர்களின் நினைவு தினங்களும் நாட்டுக்கு நாடு கொண்டாடப்படுகின்றன.

இன்று தொடக்கம் நடக்கும் மாவீரர் வாரம் வழமையான நினைவு தினக் கொண்டாட்டங்களை விட பல வகைகளிலும் வேறுபட்டதாகும்; சிறப்புப் பொருந்தியதாகும். தமிழ் மக்களின் சுதந்திரப் போராட்டம் — உரிமைப் போராட்டம் — ஆரம்பமாகியதிலிருந்து களப்பலியான — வீரமரணம் அடைந்த — போராளிகள் எல்லோரையும் ஒரே முறையில் நினைவு கூர்ந்து அவர்களின் உயிர்த் தியாகங்களை கௌரவிப்பதற்காக மாவீரர் வாரம் கொண்டாடப்படுகிறது.

ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றில், மக்களுக்காக, மண்ணுக்காக தமது உயிர்களை ஈந்து தியாகம் செய்யும் பெருமை போராளிகளுக்கு மட்டுமே உரியது. அதற்கு முந்திய அரசியல் தலைவர்கள் தமது வாழ்க்கையை அர்ப்பணித்துச் சேவை புரிந்தார்களே அன்றி உயிர்த் தியாகம் செய்தவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே.

ஆனால் இப்போதைய உரிமைப் போராட்டத்தில், ஈழத்தின் இளம் தலைமுறையினர், தமது சுகபோகங்களை உதறித் தள்ளி, வாழ்க்கையின் வசந்த காலத்தை தமிழ் மண்ணுக்காக அர்ப்பணித்து நாளாந்தம் வீரசொர்க்கம் அடைகிறார்கள். வீரமறவர்களாக நின்று போராடித் தமது இன்னுயிர் நல்குகிறார்கள்.

அவர்கள் பேருக்கும் புகழுக்குமாக ஆயுதம் ஏந்தவில்லை. தமிழ் மக்கள் அடிமைத்தனையிலிருந்து விடுபட்டு சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க வேண்டும்; தமிழ் மண்ணைக் காப்பாற்ற வேண்டும்; என்ற உன்னத இலட்சியங்களுக்காகவே ஆயுதம் ஏந்தித் தமது இன்னுயிர் நல்குகிறார்கள்.

அவர்கள் எதற்காகத் தமது உடலையும், உயிரையும் ஈந்து இலட்சிய புருடர்களாயினர் என்ற உட்பக்கத்தை நோக்கவேண்டும். அவர்களின் இலட்சியத்தை ஈட்டுவதற்கு தம்மால் எந்த விதத்தில் உதவ முடியும் என்று ஒவ்வொருவரும் உன்னுதல் வேண்டும். அதற்காக உழைப்பதே மாவீரர் நினைவைக் கொண்டாடுவதன் பெரிய அறுவடையாக அமைய வேண்டும்.

பண்டைத் தமிழர்கள், போரில் மடிந்த வீரனின் ஞாபகமாக வீதிகளில் வீரக்கல் நட்டு, அவனது இலட்சியத்துக்காக உழைப்பதாக நாளாந்தம் உறுதி மொழி செய்து, அவ்வாறே செயலாற்றியதாக இலக்கியங்கள் சொல்லும்.

# மீளக் குடியேற முடியாத நிலையில்

# தீவுப்பகுதிக் குடும்பங்கள் 1,875

## உதவி எதுவும் இல்லை என்று புகார்

யாழ்ப்பாணம், நவ. 21

இராணுவ நடவடிக்கையால் வீடுகளை இழந்த தீவுப் பகுதி மக்கள் மீளக்குடியேற அரசாங்கமோ, அரச சார்பற்ற நிறுவனங்களோ உதவி வழங்காததால் அவர்கள் தொடர்ந்தும் அகதிமுகாம்களிலேயே தங்கியிருக்க வேண்டி உள்ளது.

மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு, சரவணைப் பகுதிகளைச் சேர்ந்த 1,875 குடும்பங்கள் தமது வீடுகளை இழந்து மீளத் தமது இருப்பிடங்களில் குடியேற முடியாத நிலையில் உள்ளன.

அவர்களுக்கு வீடுகளைப் புனரமைக்க அரசாங்கமோ, அரச சார்பற்ற நிறுவனங்களோ எந்தவித உதவியையும் இதுவரை வழங்கவில்லை.

இதனால் அவர்கள் மண்கும்பானில் உள்ள 4 அகதி முகாம்களில் தங்கி உள்ளனர். (இ-3-5)

## லொறியை நோக்கிச் சூடு

தென்மராட்சி, நவ. 21

விறகு ஏற்றிக்கொண்டிருந்த லொறியை நோக்கி ஹெலியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

அல்விப்பளை கறுக்காய்க் காட்டில் இச்சம்பவம் நடந்தது. [இ-117]

## நிர்வாகசேவைப் பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட மாட்டா

### கொழும்பில் நடக்கும் என அறிவிப்பு

கொழும்பு, நவ. 21

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா நிர்வாக சேவைப் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான விசேட பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெற மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுப்பாடில்லாத போட்டிப் பரீட்சை, மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை ஆகிய இரண்டும் இம்மாதம் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளன.

எக்காரணம் கொண்டும் பிரஸ்தாப பரீட்சைகள் ஒத்திப் போடப்பட மாட்டா என்றும் யாழ்ப்பாணத்தைப் பரீட்சை நிலையமாகக் குறிப்பிட்ட விண்ணப்பதாரர்கள் கொழும்பிலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்றும் பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பு கொம்பனித் தெரு, மலே வீதியில் உள்ள பரீட்சைத் திணைக்கள அலுவலகத்தில் பரீட்சைகளுக்குரிய அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## சாயி ஜெயந்திவிழா

யாழ்ப்பாணம், நவ. 21

பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் 65ஆவது ஜெயந்தி விழாவும், 50 ஆவது ஆண்டு பொன்விழாவும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை சித்தங்கேணி சத்யசாயி சேவா சமித்தியில் நடைபெறும்.

காலைமுதல் மாலைவரை விசேட நிகழ்ச்சிகள் இடம் பெறும். (இ-3)

## தமிழ் அதிகாரி இருப்பிடம் பற்றி அறிய 'இன்ரர்போல்' உதவி

கொழும்பு, நவ. 21

இப்போது பொஸ்வானாவில் வாழும் இலங்கைத் தமிழர் ஒருவர் எங்கிருக்கிறார் என்பதைக் கண்டறிவதற்கு ''இன்ரர்போல்'' நிறுவனத்தின் உதவி கோரப்பட்டுள்ளது.

நிதி அமைச்சில் முன்னர் திறைசேரி உள்ளகக் கணக்காய்வாளராகவும், வெளிநாட்டு மூலவளப் பிரிவின் இயக்குநராகவும் பணிபுரிந்த டாக்டர் சே. வேலாயுதபிள்ளையின் இருப்பிடத்தைக் கண்டறியவே 'இன்ரர்போலின்' உதவியை இரகசியப் பொலீஸார் நாடியுள்ளனர்.

இந்தத் தகவல் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரி. சுந்தரலிங்கத்துக்குத் தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் நிதி மந்திரி ரொனி டி மெல்லுக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கில், டாக்டர் வேலாயுதபிள்ளையும், மூன்று முக்கிய சாட்சிகளில் ஒருவராவார்.

திறைசேரியின் முன்னாள் செயலாளர் ஜி. குமாரணதுங்க, இப்போது பங்களாதேஷில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பணிபுரியும் ஏ. ஆர். சுமணசேனா ஆகியோரே அடுத்த இருவருமாவார். திரு. குமாரணதுங்க இப்போது மணிலாவில் ஆசிய அபிவிருத்தி வங்கியில் பணிபுரிகிறார்.

டாக்டர் வேலாயுதபிள்ளையின் விலாசம் ''இன்ரர்போல்'' மூலம் கிடைத்ததும் நீதிமன்றம் மூவர் மீதும் பிடிவிறாந்து பிறப்பிக்க முடியும் என்று சிரேஷ்ட அரச சட்டத்தரணி ஆர். சி. பெரேரா நீதிபதியிடம் தெரிவித்தார். (அ)

## மருத்துத்துறை: கூடுதல் மாணவர் அனுமதி

கொழும்பு, நவ. 21

அடுத்த கல்வி ஆண்டில் கூடுதல் மாணவர்களை பல்கலைக் கழக மருத்துவ பீடங்களில் அனுமதிக்க முடிவாகி உள்ளது.

இதன்படி 850 வைத்திய மாணவர்கள் இப் பீடங்களுக்கு அனுமதிக்கப்படுவர். முந்திய ஆண்டில் 555 வைத்திய மாணவரே மருத்துவ பீடங்களில் அனுமதிக்கப்பட்டனர். (ஒ-எ)

## நெடுந்தீவில் உலர் உணவு

நெடுந்தீவு, நவ. 21

நெடுந்தீவுப் பகுதியில் உள்ள மக்களுக்கான உலர் உணவு விநியோகத்துக்கான அனுமதி அட்டைகள் இப்போது வழங்கப்பட்டு வருகின்றன. சுமார் ஆயிரத்து ஐந்நூறு குடும்பங்கள் இந்த அட்டையைப் பெற்றுள்ளன.

அட்டைகளைத் துரிதமாக விநியோகித்து முடிக்க நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். வேல் முருகுப்பிள்ளை நடவடிக்கை எடுத்துள்ளார். (இ-11 ɪ)

## வை. எம். சி. ஏ விவரம் சேகரிக்கிறது

யாழ்ப்பாணம், நவ. 21

மத்திய - கிழக்கு நாடுகளான குவைத், ஈராக் ஆகியவற்றில் பணிபுரிந்து தற்பொழுது வெறுங்கையுடன் நாடு திரும்பியுள்ளவர்களின் விவரங்களைச் சேகரிப்பதில் யாழ். வை. எம். சி. ஏ ஈடுபட்டுள்ளது.

இப்படியானவர்களை யாழ். வை. எம். சி. ஏ செயலாளர் திரு. எம். தம்பித்துரையுடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (இ)

## தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் மாவீரர் நாள் கண்காட்சி:

மாவீரர் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 23 ஆம், 24 ஆம், 25 ஆம் திகதிகளில் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய பகுதிகளில் மாவீரர் நாள் கண்காட்சிகளை நடத்த தமிழீழ ஆய்வு நிறுவனம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

கண்காட்சியின் நோக்கங்கள் பற்றி தமிழீழ ஆய்வு நிறுவனம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

1. தமிழீழத்தின் பொருளாதாரத்துக்கு உதவக்கூடிய மூலவளங்களையும், கிடைக்கக்கூடிய மூலப்பொருள்களையும், அவற்றின் தற்போதைய பயன்பாட்டளவுகளையும், எதிர்காலத்தில் மேற்கொள்ளக்கூடிய பொருளாதார நடவடிக்கைகளையும் மக்கள் அறியச் செய்தல்.

2. தமிழீழத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் கடற்றொழில், கைத்தொழில், விவசாய நடவடிக்கைகளையும், அவற்றின் உற்பத்திகளையும் அதிகரிக்க உள்ளூர் உற்பத்திகளை மக்கள் கொள்வனவு செய்யத் தூண்டுதல்.

3. தமிழீழ மக்கள் எதிர்நோக்கும் பொருளாதார எரிபொருள் பிரச்சினைகளை வெளிக்காட்டி இப்பிரச்சினைகளை எதிர் கொள்ள [illegible] ஆய்வு நிறுவனம் எடு[illegible] ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மக்களுக்குக் காட்சிப்படுத்தல்.

4. தமிழீழ பொருளாதார விருத்திக்கு எடுக்கப்படும் ஆய்வு வேலைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆய்வாளருக்கும், தொழில் நுட்பவியலாளருக்கும் எடுத்துக் காட்டுதல், ஆக்கபூர்வமாக உதவக்கூடியவர்களின் பங்களிப்பைப் பெற முயற்சித்தல்.

5. பொருளாதார விருத்திக்கு உதவக்கூடியதும், வேலையற்றிருப்போரின் குடும்பப்பொருளாதாரத்தை உயர்த்தவும், தமிழீழத்தில் இருக்கக்கூடிய வேலை வாய்ப்புகளை எடுத்துக் காட்டவும் முயற்சி எடுத்தல்.

6. பொருளாதார விருத்தியில் உதவக்கூடிய தனியார் ஸ்தாபனங்களின் பங்களிப்புகளை மக்கள் அறியச் செய்து அவற்றை மக்கள் பயன்படுத்தும் ஆற்றலை வளர்த்தலும்.

7. உள்ளூர் உற்பத்தியாளருக்குத் தமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்த வசதி அளித்தல்.

8. தமிழீழத்தின் பொருளாதாரத்தின் சுய நம்பிக்கை கொள்ளச் செய்தல், அதற்காக யாவரும் உழைக்க வேண்டும் என்னும் உணர்வை [illegible] (இ)

## மாவீரன் நினைவுகள் மறக்குமா?

கல்லறைக்குள் சமைந்த கனிவான புலிகளுக்கு
காவியத்தின் ஏடுகள் காவலாய் இருக்கும்;
புல்லரினை ஒழிக்கப் புனிதப்போர் புரிந்தங்கே
பூமரம்போல் ஆகிப் புதைகுழிக்குள் சென்ற
வல்லவருக் கிம்மண் வாழ்த்துக்கள் கூறும்;
ஊற்றாத கடலலைகள் எழுந்து பாடும்;
செல்லு மிடமெல்லாம் சிலைகளாய் நிற்போர்
இந்நாட்டிலே வாழும்...... மாவீரர் அன்றோ?

★ ★ ★

மண்ணைக் காக்க மரணித்த வீரனுக்கு
மக்கள் தலைவணங்க வேண்டாமோ?
கண்ணான ஈழம் ...... காப்பதற்குச் சென்றவனைக்
காலமெல்லாம் நாம் போற்ற வேண்டாமோ?
பொன்னென்று எம்முடனைப் போற்றி நாம்
இருக்கையிலே
புலிமாகத் தம்முடலைப் போர் முனையில்
விட்டவரை
எண்ணாமல் இருக்கின்ற நாளொரு நாளோ?
இதயத்தில் மாவீரன் நினைவுகள் மறக்குமோ?

-மு. வே- யோ. வாஞ்சிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் தட்டுப்பாடு: யாழ் ஆஸ்பத்திரியில் சுகாதார சீர்கேடு ஏற்படும் ஆபத்து

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ். போதனா வைத்திய சாலையில் நிலவும் மின்சாரத் தட்டுப்பாடு காரணமாக பல சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜெனரேட்டர் மூலம் வழங்கப்படும் மின்சாரம் இரவு 11 மணியுடன் நிறுத்தப்படுகிறது

அவசர தேவைகளுக்கு மாத்திரமே அவ்வப்போது மின்சாரம் வழங்கப்படுகிறது.

இக் காரணங்களால் வைத்தியசாலையில் குறிப்பாக இரவு நேரங்களில் தண்ணீர் பாவனை தடைப்படுகிறது.

நோயாளர் பாவனைக்குத் தண்ணீர் அற்ற நிலையில் பெரும் சிரமங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது;

தண்ணீர்த் தட்டுப்பாட்டினால் மலசலகூடங்கள் அசுத்தப்பட்டு வார்ட்டுகளில் துர்நாற்றம் வீசுகிறது.

இரவு 11 மணிக்குப் பின் வார்ட்டுகள் பெரும்பாலும் இருளில் மூழ்கிவிடுகின்றன: அவசர வைத்திய சேவைகள் லாம்புகள், குப்பிவிளக்குகளின் உதவியுடனேயே மேற்கொள்ளப்படுகின்றன.

(இ-15)

## இலங்கைத் தமிழர் பிரச்சினை: பேச்சு மூலம் தீர்வு காண சந்திரசேகரிடம் வலியுறுத்து

புதுடில்லி, நவ. 21

இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வுகாண இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் என்று இந்திராகாங்கிரஸ் எம்.பி தனுஷ்கோடி ஆதித்தன் பிரதமர் சந்திரசேகரைக் கேட்டுக்கொண்டார்.

பிரதமரிடம் இது சம்பந்தமாக மனு ஒன்றையும் அவர் கையளித்தார்.

கடத்தல் மற்றும் குற்றச் செயல்கள் தமிழக கரையோரப் புறங்களில் இடம் பெறாமல் தடுப்பதற்கு கூடுதல் கப்பற் படையினரையும் சேவையில் மத்திய அரசு ஈடுபடுத்த வேண்டும் என்றும் அவர் பிரதமரை வற்புறுத்தினார்.

[இ-எ]

## ● இருதய நோயாளர்களே கரட் அதிகம் சாப்பிடுங்கள்!

டலாஸ், நவ 21

இருதய நோயாளர்களுக்கு ஒரு நல்ல செய்தி கரட்டின் விட்டமின் 'ஏ'யில் இருக்கும் ஓர் இரசாயனப் பொருள் இருதய நோயைக் கட்டுப்படுத்தப் பெரிதும் உதவும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கரட்டின் நிறத்தை "ஓரெஞ்சாக" மாற்றும் விட்டமின் 'ஏ'யில் உள்ள அந்த இரசாயனப் பொருள் – மாரடைப்பு. இருதய நோயால் ஏற்படும் திடீர் மரணம், திடீர்தாக்கு[Stroke] என்பனவற்றைப் பெருமளவில் கட்டுப்படுத்தும்—என்று அறிவிக்கப்பட்டுள்ளது

பொஸ்டனைச் சேர்ந்த இருதயவியல் நிபுணரான டாக்டர் மைக்கல்கசியனோ கரட்டின் விசேட தன்மை குறித்துத் தாம் செய்த ஆராய்ச்சிகள் வெற்றி கண்டுள்ளதாக கடந்த வாரம் நடைபெற்ற இருதயவியல் நிபுணர்களின் மாநாட்டில் அறிக்கை வெளியிட்டார்.

அமெரிக்க இருதயவியல் நிபுணர்கள் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரஸ்தாப மாநாட்டில், உலகெங்கும் இருந்து 20,000 இருதயவியல் டாக்டர்கள் பங்குபற்றினர்.

(அ)

## தென்இந்திய திருச்சபை விதவைகளுக்கு நிவாரணம்

யாழ்ப்பாணம், நவ. 21

தென் இந்திய திருச்சபையின் யாழ்-ஆதீனம் குடும்பத் தலைவர்களை இழந்த விதவைகளுக்கு நிவாரணம் வழங்க இருக்கிறது.

கடந்த ஜூன் மாதம் 11ஆம் திகதி முதல் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே இந்த நிவாரணம் வழங்கப்படும்.

இது தொடர்பான விண்ணப்பங்களை இன்று 21ஆம் திகதிக்கும் 27ஆம் திகதிக்கும் இடையில் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(இ - 6)

## ரூ. 20 லட்சம் செலவிலேயே இதுவரை திருத்த வேலைகள்

யாழ்ப்பாணம், நவ. 21

விமானத் தாக்குதலால் சேதமடைந்த யாழ். போதனா வைத்தியசாலையில் இதுவரை 20 லட்சம் ரூபா செலவில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சத்திரசிகிச்சை நிலையம் தற்சமயம் திருத்தப்பட்டு வருகிறது. கண்ணாடிகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால் திருத்த வேலைகள் தடைப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-31)

## மருத்துவ மாணவர் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 21

மருத்துவபீட மூன்றாம், இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கான பரீட்சைகள் டிசம்பர் மாதம் முதல் நடைபெற உள்ளன.

மூன்றாம் ஆண்டு பரீட்சை (பகுதி II) டிசம்பர் 20 ஆம் திகதியும்; — இரண்டாம் ஆண்டு மீள் பரீட்சை டிசம்பர் 27 ஆம் திகதியும்; —மூன்றாம் ஆண்டு மீள் பரீட்சை[பகுதிI, பகுதிII) 1991ஆம் ஆண்டு ஏப்ரல் 8ஆம்திகதியும்–நடைபெற ஏற்பாடாகியுள்ளதாக பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார்.

[இ-6]

## கிழக்கு அகதிகளுக்கு சமையல், விவசாய உபகரணங்கள்

யாழ்ப்பாணம், நவ. 21

வடமராட்சி கிழக்கிலும் முல்லைத்தீவிலும் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் மீளக்குடியமர்த்தப்பட்ட கிழக்குமாகாண அகதிகளுக்கு ரூபா 2 ஆயிரம் பெறுமதியான சமையல் உபகரணங்களும், விவசாய உபகரணங்களும் வழங்கப்பட உள்ளன.

திருகோணமலையிலிருந்து இடம்பெயர்ந்து வந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தற்போது வடமராட்சி கிழக்கு, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட குடிசைகளில் குடியமர்த்தப்பட்டு வருகின்றன.

அவ்வாறு குடியமர்த்தப்படும் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் ரூபா 750 பெறுமதியான சமையல் உபகரணங்களையும் ரூபா 1,250 பெறுமதியான விவசாய உபகரணங்களையும் செஞ்சிலுவைச் சங்கம் வழங்க இருக்கிறது.

(இ-5)

# உள்நாட்டு நெருக்கடிகளால் திணறும் சார்க் அமைப்பு நாடுகள்

சார்க் நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் உச்சி மாநாடு இன்று புதன்கிழமை ஆரம்பமாகி, வெள்ளிக்கிழமை வரை நடைபெறுகிறது.

சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கும் ஏழு நாடுகளில் நிலவும் நெருக்கடிகள் பற்றிய ஒரு கண்ணோட்டம் இங்கு பிரசுரமாகிறது.

இந்தியா. பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், இலங்கை, பூட்டான், மாலைதீவு ஆகிய ஏழு நாடுகளும் சேர்ந்து உருவாக்கிய அமைப்புத்தான் ஆங்கிலத்தில் சுருக்கமாக 'சார்க்' என்று அழைக்கப்படும் தெற்காசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்புச் சங்கம் ஆகும்.

இந்த அமைப்பு இதுவரை நான்கு உச்சி மாநாடுகளை நடத்தி விட்டது. ஐந்தாவது மாநாடு கடந்த ஆண்டு இலங்கையில் நடைபெற்றிருக்க வேண்டும்.

இந்தியப்படை இலங்கையில் அப்போது நிலைகொண்டிருந்ததால் ஜனாதிபதி பிரேமதாஸா அம்மாநாட்டைக் கொழும்பில் நடத்த முன்வரவில்லை.

இந்த ஆண்டில் நடத்த

## மாலேயில் இன்று உச்சி மாநாடு

அவர் முன்வந்த போது, மாலைதீவு அந்த வாய்ப்பைத் தட்டிப் பறித்துக் கொண்டது.

### இந்தியா

சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கும் மிகப்பெரிய நாடு இந்தியா.

இன்றைய இந்தியாவின் மதசார்பின்மையைக் குழிதோண்டிப் புதைக்கும் அளவிற்கு அரசியல்வாதிகள் செயலாற்றி வருகின்றார்கள்.

பஞ்சாப், காஷ்மீர் பிரச்சினைகளுடன் அஸாம் மற்றும் திரிபுரா போன்ற மாநிலங்களிலும் கிளர்ச்சி இயக்கங்களின் நடவடிக்கைகளில் தொய்வு காணப்படவில்லை; தீவிரம்தான் காணப்படுகிறது.

பதவிக்கு வந்த பத்துத் தினங்களில் பிரதமர் சந்திரசேகர் சார்க் உச்சிமாநாட்டில் கலந்து கொள்ளப்போகிறார்.

### பாகிஸ்தான்

அதிபர் ஸியா – உல் – ஹக்கின் மரணத்தின் பின்னர் பாகிஸ்தானில் ஜனநாயகம் மலர்ந்துவிட்டது என்று நம்பப்பட்டது.

பெனாஸிர் பிரதமராக வந்தது அந்த நம்பிக்கைக்கு உரமூட்டியது.

ஆனால் இராணுவ [illegible]

யுடன் கூடிய ஜனநாயகம் தான் அங்கு மலர முடியும் என்பதை பெனாஸிரின் பதவி நீக்கம் உலகுக்கு எடுத்துக் காட்டிவிட்டது.

எதிர்பார்ப்புக்கு மாறாக பெனாஸிர் தோற்றார். இராணுவ 'ஆசி' பெற்ற நவாஸ் ஷெரிப் தற்போது பிரதமராக வந்திருக்கிறார்.

100க்கு 25பேர்தான் பாகிஸ்தானில் எழுத, வாசிக்கத் தெரிந்தவர்களாக உள்ளனர். ஆசிரியரின் எண்ணிக்கையிலும் பார்க்க ஆயுதப்படையினர்தான் அங்கு அதிகம்.

மதத்தால் ஒன்பட்டிருந்தும் மாநில ரீதியில் பாகிஸ்தானியரிடையே வேற்றுமை நிலவுகின்றது.

100க்கு 65சதவீதமான பாகிஸ்தானியர் பஞ்சாப் மாகாணத்தில் வாழ்ந்தும், இம்முறைதான் பஞ்சாப்பிக்காரர் ஒருவர் பிரதமராகி இருக்கிறார். இதுவரை காலமும் சிந்து மாகாணத்தவரே பிரதமர் பதவியை பெற்று வந்தனர்.

அணுகுண்டு தயாரிப்பில் பாகிஸ்தான் ஈடுபடுவதாக சந்தேகித்து, அமெரிக்கா தனது இராணுவ மற்றும் பொருளாதார உதவிகளை நிறுத்திவிட்டது.

பாகிஸ்தான் தலையீடு செய்து வருவதன் காரணமாக. இந்தியாவுடனான அதன் உறவு பதற்றநிலையில் காணப்படுகிறது.

### பங்களாதேஷ்

அரசியல் நெருக்கடிக்கும் இயற்கையின் சீற்றத்திற்கும் அடிக்கடி ஆளாகிவரும் பங்களாதேஷில் இன்று மக்களின் பெரும்பாலோரும். எதிர்க்கட்சித் தலைவர்களும் ஜனாதிபதி எர்ஷாட்டை பதவியில் இருந்து விலக்கும் போராட்டத்தைத்தான் முன்னின்று நடத்திவருகின்றனர்.

சார்க் உச்சிமாநாடுகளில் தவறாது தொடர்ந்து கலந்து கொள்ளும் தலைவர் என்ற பெருமையையும் இம்முறையும் எர்ஷாட்டே பெறப் போகிறார்.

### நேபாளம்

ஜனநாயக உரிமைகளுக்காக நேபாள மக்கள் கடந்த ஆண்டு நடத்திய போராட்டம், இன்று மன்னர் பிரேந்திராவை 'பொம்மை மன்னர்' ஆக்கிவிட்டது.

கடந்த 9 ஆம் திகதி மன்னர் பிரேந்திரா, புதிய அரசியல் சாசனத்தை பிரகடனம் செய்து 2 நிமிட உரை நிகழ்த்தினார்.

அந்த உரையுடன் இருநூறு ஆண்டுகளாக வைத்து இருந்த சகல நிறைவேற்று அதிகாரங்களையும் மன்னர் பிரேந்திரா, நாடாளுமன்றத்திற்குத் தாரை வார்த்துக் கொடுத்து விட்டார்.

ஆகவே பிரேந்திரா 'பொம்மைமன்னராக' மாலே செல்வாரா? அல்லது தனது [பிரதம] மந்திரியை மாலே அனுப்பி வைப்பாரா? என்பது தெரியவில்லை.

### இலங்கை

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள், இன்று அமெரிக்க காங்கிரஸ் முதல் ஐரோப்பிய நாடாளுமன்றம் வரை பேசப்படும் விஷயமாகிவிட்டது.

உதவும் நாடுகளும் இம்முறை கடன் வழங்கும் விஷயத்தில் இலங்கைக்கும் கடும் நிபந்தனைகளை விதித்துள்ளன.

இன நெருக்கடி மீண்டும் நாட்டில் உச்சக்கட்டம் அடைந்துள்ள இந்த நிலையில் ஜனாதிபதி பிரேமதாஸா மாலே மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. பிரதமரே இலங்கையின் சார்பில் கலந்து கொள்கிறார்.

### பூட்டான் மாலைதீவு

பூட்டான், மாலைதீவு ஆகியவற்றில் உள்நாட்டு நெருக்கடிகள் அவ்வளவாக இல்லை. இந்த நாடுகளின் கருத்துக்கள் மாநாட்டின் பெறுபேறுகளில் அவ்வளவு மாற்றத்தை ஏற்படுத்தப் போவதும் இல்லை.

சார்க் அமைப்பின் பெரும்பாலான நாடுகள் உள்நாட்டு நெருக்கடிகளால் நிம்மதியற்ற நிலையில் உள்ளன.

இந்த நிலையில் தெற்காசிய பிராந்திய அமைதிக்கும் வளர்ச்சிக்கும்உலக அமைதிக்கும் மாலே மாநாடு உதவுமா என்பதே இன்று எழும் முக்கிய கேள்வி ஆகும்;

(இ-எ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகச் செய்திகள்

## மேலும் $2\frac{1}{2}$ லட்சம் படையினர்

குவைத்துக்கு மேலும் $2\frac{1}{2}$ லட்சம் துருப்புக்களை ஈராக் அனுப்பி வைத்திருக்கிறது.

கடந்த ஆகஸ்ட் 2ஆம் திகதி ஈராக், குவைத்தைக் கைப்பற்றியதுடன், அந்த நாட்டை பத்தொன்பதாவது மாகாணமாக தன்னுடன் இணைத்துக் கொண்டது தெரிந்ததே. (இ-எ)

## கருணாநிதியின் விஜயம் ரத்து

நேற்று மேற்கொள்விருந்த புதுடில்லிப் பயணத்தை தமிழக முதலமைச்சர் கருணாநிதி ரத்துச் செய்துவிட்டார் என்று அறிவிக்கப்பட்டது.

உடல் நலக்குறைவே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. புதுடில்லியில் பிரதமர் சந்திரசேகரை கருணாநிதி சந்திக்க இருந்தார். (இ-எ)

## எர்ஷாத்துக்கு நெருக்கடி

டாக்கா, நவ 21

பதவி விலகி, சுதந்திர நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த வழிவிடுமாறு பங்களாதேஷ் ஜனாதிபதி முகமட் எர்ஷாத்துக்கு, அங்குள்ள அனைத்து எதிர்க்கட்சிகளும் வேண்டுகோள் விடுத்துள்ளன. (இ-எ)

## தேவிலால் மீண்டும் தொல்லை

புதுடில்லி, நவ 21

துணைப்பிரதமர் தேவிலால் தமது ஆதரவாளர்களுக்கு முக்கிய அமைச்சுகள் வழங்கப்பட வேண்டும் என்று அடம்பிடிப்பதாலேயே இந்தியப் பிரதமர் தமது அமைச்சரவையை அறிவிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

பிரதமர் திரு எஸ் சந்திரசேகர். தாம் கொண்டுவந்த நம்பிக்கை கோரும் பிரேரணையில் வெற்றிபெற்று மூன்று நாளாகியும் அமைச்சரவைபற்றி இன்னும் அறிவிக்கவில்லை.

திரு. தேவிலால் தமது ஆதரவாளர்களான எம் பிக்களுக்கு வெளிவிவகாரம், நிதி, திட்டமிடல் அமைச்சுக்கள் கட்டாயம் வழங்கப்பட வேண்டும் என்று பிரதமருக்குத் தொல்லை கொடுக்கிறாராம். (அ-3)

## ஈராக் அறிவிப்பும் நிராகரிப்பும்

பக்தாத், நவ. 21

வளைகுடாவில் அமைதி நிலவுமானால் கிறிஸ்மஸ் தினமான டிசம்பர் 25 முதல் பணயமாக வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டுப் பிரசைகளைக் கட்டம் கட்டமாக விடுதலை செய்யப் போவதாக ஈராக் அறிவித்தது.

கடைசி வெளிநாட்டுப் பிரசை அடுத்த மார்ச் மாதம் 25 ஆம் திகதி ஈராக்கைவிட்டு வெளியேற அனுமதிக்கப்படுவார் என்று ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் அறிவித்தார்.

இதேவேளை—

வெளிநாட்டுப் பிரசைகளை 3 மாத காலத்தில் படிப்படியாக விடுவிக்கப்போவதாக ஈராக் விடுத்த அறிவிப்பை அமெரிக்காவும் பிரிட்டனும் நிராகரித்து விட்டன.

மனிதாபிமானத்தை இண்டல் செய்யும் நடவடிக்கையாக ஈராக்கின் அறிவிப்பு அமைந்திருப்பதாகவும் இரு நாடுகளும் குற்றஞ்சாட்டின.

மனிதாபிமானத்துக்கு மதிப்பு அளிப்பதாக இருப்பின், பணயமான வெளிநாட்டுப் பிரசைகளை ஒரே தரத்தில் ஈராக் விடுதலை செய்ய வேண்டும் என்றும் அமெரிக்காவும் பிரிட்டனும் கோரியுள்ளன.

ஈராக்கின் புதிய அறிவிப்பு குவைத் பிரச்சினை தீருவதற்கு பேச்சுவார்த்தை நடத்த உதவும் என்று பலஸ்தீன விடுதலை இயக்கம் தெரிவித்தது. (ஒ-எ)

## தமிழக அரசு கலைப்பு இல்லை

தமிழக அரசு கலைக்கப்படமாட்டாது என்று பிரதமர் சந்திரசேகரும் துணைப் பிரதமர் தேவிலாலும் உறுதியளித்துள்ளனர்.

இப்படி தமிழக வருவாய்த் துறை அமைச்சர் நாஞ்சில் மனோகரன் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். [ஒ-எ]

# வடக்கு - கிழக்கை உடனே தனித்தனியே பிரித்துவிடுங்கள்

## அரசிடம் அனுரா

கொழும்பு, நவ. 21

இப்போது தற்காலிகமாக இணைக்கப்பட்டிருக்கும் வடக்கு - கிழக்கு மாகாணங்களை உடனடியாகத் தனித்தனியாகப் பிரிக்க வேண்டும். சனநாயகத்தின் பேரில் அரசாங்கம் இதனைச் செய்ய வேண்டும்.

இவ்வாறு அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறார் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், சுதந்திரக் கட்சி எம். பியுமான திரு. அனுரா பண்டாரநாயக்கா.

நாடாளுமன்றத்தில் இம்மாத முற்பகுதியில் உரையாற்றுகையில் அவர், வடக்கையும் கிழக்கையும் தனித்தனியே பிரித்துவிடவேண்டும் என்று வலியுறுத்தினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது;-

வடக்கிலும், கிழக்கிலும் சிங்களவர்களும், முஸ்லிம்களும் தாக்கப்பட்டதற்கு இரண்டு மாகாணங்களும் இணைக்கப்பட்டதே பிரதான காரணம். 1987 இல் இரண்டு மாகாணங்களையும் இணைத்தவர்கள் நீங்களே. அதனை நாம் அப்போதும் எதிர்த்தோம். இப்போதும் எதிர்க்கிறோம்.

இணைப்பால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை விளக்கி அப்போது நான் ஒரு நூல் வெளியிட்டிருந்தேன்.

வடக்கும் கிழக்கும் தமிழர்களின் பாரம்பரியத் தாயகம் என்பதால் அது பேச்சுவார்த்தைக்குரிய விடயமல்ல என்று பிரபாகரன் கூறியது குறித்து நான் அந்த நூலில் தெரிவித்திருந்தேன்.

ஐக்கிய தேசியக்கட்சி முழுவதும் அப்போது இணைப்பை ஆதரித்தது; எனவே அதனால் ஏற்பட்டுவரும் பாதக விளைவுகளுக்கு ஜே ஆர் ஜெயவர்த்தனா மட்டுமன்றி அப்போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த எல்லா ஐ. தே. க. யினரும் பொறுப்பாளிகள்.

சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பல்வித பாதிப்புகளும், பாதகங்களும் ஏற்பட்ட பின்னரும் இரண்டு மாகாணங்களையும் பிரித்து விடுவதற்குப் பிரேமதாசா நிர்வாகம் எதுவுமே செய்யவில்லை.

வடக்கு-கிழக்கு இணைப்புக் குறித்து ஒரு வருடத்திற்குள் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று அப்போது கூறினீர்கள். வருடங்கள் மூன்று கழிந்தும் அது நடந்தபாடில்லை!

சிங்களவர்களையும், முஸ்லிம்களையும் திருப்திப்படுத்துவதற்காகவே சர்வசன வாக்கெடுப்பு என்று அறிவித்தார் என்பதை நாம் அப்போதே கூறியிருந்தோம்.

இப்போது நடந்துள்ள சம்பவங்களின் பின்னர், சிங்களவரோ முஸ்லிம்களோ இணைப்புக்கு இணங்கப் போவதில்லை. சனநாயகத்தின் பேரில் வடக்கையும், கிழக்கையும் தனித்தனியாகப் பிரித்து விடுங்கள். முஸ்லிம்களுக்கு நேர்ந்துள்ள கதிக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பு. அதனை நிவர்த்தி செய்யவேண்டியதும் அரசின் பொறுப்பே.

உங்கள் தவறை மற்றவர்கள் தலையில் கட்டி அடிக்க முனையாதீர்கள் என்றார். (அ)

## மலாயன் பென்ஷன்காரர் வவுச்சர்

யாழ். மாவட்டத்தில் மலாயன் பென்ஷன் பெறுபவர்களுக்கான செப்டெம்பர், அக்டோபர் மாதப் பென்ஷன் வவுச்சர்கள், காசோலைகள் என்பன உரிய வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுவிட்டன என்று யாழ் செயலக ஓய்வூதியக் கிளை கணக்காளர் தெரிவித்தார். (இ-6)

## பணமாக சம்பளம்

யாழ்ப்பாணம், நவ 21

யாழ் செயலக ஊழியர்களுக்கான நவம்பர் மாதச் சம்பளம் பணமாக வழங்கப்பட்டது. (இ 6)

# இலங்கைக்கு மேலும் நிதி உதவி; உலக வங்கி ஆதரவு கோருகிறது

வாஷிங்டன், நவ. 21

இலங்கைக்கு உதவும் நாடுகள் குழு, கொழும்பு அரசுக்குமேலும் நிதிஉதவி அளிக்கும் சாத்தியம் உண்டு என்று உலக வங்கி வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

கடந்த மாதம் பாரிஸில் நடந்த இ. உ. நா. குழுக் கூட்டத்தில் இலங்கைக்கு நூறுகோடி அமெரிக்க டாலர்கள் உதவி வழங்க முடிவு செய்யப்பட்டது தெரிந்ததே.

அதற்கு மேலதிகமாக இலங்கைக்குக் கூடுதல் நிதி உதவி வழங்க வேண்டும் என்று உலகவங்கி இ. உ. நா. குழுவைக் கேட்டிருக்கிறது.

உலகவங்கியின் ஆசியபிராந்தியப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில்—

உலகச் சந்தையில் எரிபொருள்களின் விலை உயர்வு தொடருமானால் இலங்கைக்கு மேலும் நிதி உதவி வழங்கத் தயாராக இருக்குமாறு நிதி உதவும் நாடுகள் கேட்கப்பட்டுள்ளன.

இலங்கையின் பொருளாதாரம் அண்மைக் காலங்களில் ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ளது. அந்த வளர்ச்சிக்குத் தடங்கல் ஏற்படாமல் இருக்க வேண்டுமாயின், எரிபொருள் விலை உயர்வால் ஏற்படக்கூடிய தாக்கங்களைச் சமாளிக்க இலங்கைக்கு உதவ வேண்டி இருக்கும். எனவே மேலதிக உதவி வழங்கத் தயாராக இருக்கவும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தங்க பிஸ்கட் பறிமுதல்

கொழும்பு, நவ 21

50 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க பிஸ்கட் ஒன்றை கடத்தி நாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்த ஒருவருக்கு சுங்கத் திணைக்களம் ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

தங்க பிஸ்கட்டும் பறிமுதலானது.

சிங்கப்பூரில் இருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்து இறங்கியவரிடம் இருந்தே இந்த பிஸ்கட் கைப்பற்றப்பட்டது. (ஒ-எ)


## ஓராண்டு நினைவஞ்சலி

திதி: 21 - 11 - 1990

மலர்வு: 19 | 11 | 1947



உதிர்வு: 02 | 12 | 1989

அமரர்

### ஆறுமுகம் ஸ்ரீ ஆனந்தன்

அன்பரே எங்கள் ஆண்டவரே'
நின்னையே தினம் தினம் எண்ணியே! - நம்!!
பஞ்சமுகப் பிஞ்சுப் பாலகர்கள் நித்தியமாய்
'புஸ்பங்களை 'நின் படத்தில் சாத்திடவே''
பெத்தவன் என் மனமும் புழுவாய் துடித்ததுவே
நினைவிலே நின் வதனம் ஒளிவீசி அருள் பொங்க
இது நனவுதான்! என நாம் குமுறும் வேளை
'அணைத்திடவும் நீ இங்கு இல்லை!
ஓராண்டு வந்தும் என்ன? பல ஆண்டு
வந்தால், என்ன? உமைப் பிரிந்த துயர்
ஆறாது! தீராது!! மறையாது!!!

உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுகிறோம்!

மனைவி மீனா, பிள்ளைகள் [கோபி, முரளி, மது, மயூரன், முகுந்தன்] தாய், அண்ணாமார், அக்காமார், மாமிமார், மைத்துனமைத்துனிமார்.

(14824)



## இரண்டாவது பிறந்த நாள் வாழ்த்து

★ செல்வன் சிவகரன் ★

காரைநகர், களபூமி, பொன்னாவலளையைச் சேர்ந்த பரஞ்சோதி தம்பிஐயா தம்பதிகளின் செல்வப் புதல்வன் சிவகரன் இன்று தனது 2 ஆவது பிறந்த நாளை தமது இல்லத்தில் மிகவும் குதூகலமாகக் கொண்டாடுகிறார். சிவகரனை அன்பு ஐயா, அம்மா, சித்தப்பாமார், சித்திமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணன்மார், அக்காமார், அம்மம்மாமார், அம்மய்யாமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் களபூமி சத்திரந்தை, கந்தர்மடம், கொக்குவில் உற்றார், உறவினர் அனைவரும் எல்லாம் வல்ல தன்னை சித்திவிநாயகர் அருள் பெற்று நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

(14818)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தபாற் பொதிகள் நேற்றே வழங்கப்பட்டு விட்டன

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ். பிரதம தபாலகத்துக்கு நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) வந்து சேர்ந்த தபாற் பொதிகள் யாவும் நேற்றே தரம் பிரிக்கப்பட்டு குடாநாட்டில் உள்ள தபாலகங்களுக்கு வழங்கப்பட்டு விட்டன.

தபாற் பொதிகளைப் பெற்றுக் கொள்ளாத தபாலகங்களை உடனடியாகப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதே சமயம்—

நிலைமை சுமுகமாக இருப்பின் யாழ் நகரப்பகுதிக்கான தபால் விநியோகம் இன்று மேற்கொள்ளப்படும் என்றும்—

இடம்பெயர்ந்துள்ளவர்கள் தபாலகத்தில் நேரடியாக வந்து தமது கடிதங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் கூறப்பட்டது. (ஒ-6)

## மக்களைப் பதற வைத்த வானத்துப் புகைக்கூண்டு!

கோப்பாய், நவ. 21

நேற்றுக் காலை கோப்பாய், அச்சுவேலிப் பகுதி மக்கள் சிறிதுநேரம்கிலிகொண்டு ஓடியும், பதற்றமுற்றும் அவதிப் பட்டனர்.

அவர்களை அவதிப்பட வைத்தது வடமராட்சிப் பகுதிப் பக்கமாக இருந்து வானத்தில் வந்த புகைக் கூண்டு ஒன்றாகும்.

பொல்லாதவேளை, பொம்மர்கள் நீர்வேலிப் பகுதியை வட்டமிட்ட சமயம் (சுமார் 9.30 மணியளவில்) பார்த்து அந்தப் புகைக் கூண்டும் ஆடி அசைந்து வந்துகொண்டிருந்தது.

அதனைக் கண்டதும், அச்சத்தின் விளைவாய் எழுந்த மக்களின்கற்பனை அவர்களை அதிர்ச்சியுறச் செய்தது; அவலப்படவும் வைத்தது.

பொம்மர்கள் காவல்செய்ய இராணுவத்தினர் பரசூட்டில் வந்து இறங்குகிறார்கள் என்று மனதை அலையவிட்ட மக்கள், பெட்டி படுக்கைகளுடன் வீடுகளைவிட்டு ஓடினர்.

பின்னர் அலைக்கழிந்து திரும்பினர். புகைக் கூண்டு பூதர் மடத்தடியில் வீழ்ந்ததாகக் கேள்வியுற்றதும் பதற்றம் நீங்கினர் மக்கள். [அ-72]

## முஸ்லிம்களின் பிரச்சினை: தீர்வு குறித்து மந்திரி ஹமீத்

கொழும்பு, நவ. 21

முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக முன் வைக்கப்படும் எந்தத் தீர்வும், இந்நாட்டில் வாழும் மூன்று முக்கிய இனங்களின் அபிலாஷைகளையும் நிறைவேற்றுவதாக இருக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் நீதி அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத்.

இலங்கைச் சோனகர் சங்கத்தின் 75 ஆவது ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை தனிப்பட வைத்து நோக்கக்கூடாது, சிங்கள, தமிழ் மக்களுக்கு உள்ள பிரச்சினைகளையும் கருத்திற்கொண்டே, அவற்றை அனுசரித்தே தீர்வுகள் அமைய வேண்டும் — என்றும் அமைச்சர் ஹமீத் தெரிவித்தார். [அ]

## அடுத்த சார்க் மாநாடு இலங்கையில்

மாலே, நவ. 21

அடுத்து நடக்க இருக்கும் ஆறாவது சார்க் உச்சி மாநாடு அடுத்த ஆண்டு இலங்கையில் நடைபெறும்.

இதற்கான தீர்மானம் மாலேயில் நேற்று நடந்த சார்க் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. [ஒ-எ]

## மரண அறிவித்தல்கள்

### தணிகாசலம் தவதர்சன்

தணிகாசலம் தவதர்சன் அகால மரணமானார்.

இவர் பொன்னையா தணிகாசலம் திருமதி தர்மராணி ஆகியோரின் சிரேஷ்ட மகன் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் [21-11-90] இன்று முற்பகல் 10.00 மணியளவில் ஆவரங்கால் வன்னிய சிங்கம் வீதியிலுள்ள அவரது மாமனார் திருஞானசம்பந்தமூர்த்தியின் இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
பொ. தணிகாசலம்.

பத்தமேனி,
அச்சுவேலி. (14659)

### வேலுப்பிள்ளை நடேசபிள்ளை

வேலுப்பிள்ளை நடேசபிள்ளை – உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி-யாழ். கச்சேரி, 20-11-90 இல் காலமாகிவிட்டார்.

தகனக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
க. சண்முகநாதன்
மேலதிக அரச அதிபர்,
யாழ். செயலகம்.

(சி/5448)

## வானொலியில் புலிகளின் குரல்

யாழ்ப்பாணம், நவ. 21

"புலிகளின் குரல் வானொலி" இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட உள்ளது.

"புலிகளின் குரல்" நிகழ்ச்சிகளை பண்பலை வரிசை 94 மீற்றரில் (எப்எம். 94) கேட்கலாம். (ஒ)

## கடலை நாடிச் சென்ற பிரசுரங்கள்!

குருநகர், நவ. 21

குருநகர் மற்றும் கொழும்புத்துறை கிழக்கு துறைமுகப் பகுதிகளிலும் நேற்று ஹெலியில் இருந்து துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டன.

துண்டுப் பிரசுரங்களில் அனேகமானவை கடல் பக்கமாக அள்ளுண்டு சென்று விழுந்தன. (ஒ-51-30)

## ராணுவ முகாமில் முஸ்லிம்களுக்கு ஆயுதப் பயிற்சி

கொழும்பு, நவ. 21

மன்னாரில் உள்ள தள்ளாடி இராணுவ முகாமில் வைத்து 58 முஸ்லிம் இளைஞர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

பயிற்சி முடிந்ததும் இவர்கள் ஊர்காவலர்களாகக் கடமை புரிவார்கள் என்று அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா கூறியுள்ளார்.

## சார்க் மாநாடு இன்று மாலேயில் ஆரம்பம்

மாலே, நவ. 21

ஐந்தாவது சார்க் உச்சி மாநாடு இன்று மாலைதீவு தலைநகர் மாலேயில் ஆரம்பமாகிறது.

மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கயூம் மாநாட்டை அங்குரார்ப்பணம் செய்து வைக்கிறார்.

இலங்கையின் சார்பில் ஜனாதிபதிக்குப் பதிலாக பிரதமர் டி. பி. விஜேதுங்க மாநாட்டில் கலந்து கொள்கிறார். [ஒ-எ]

## பாடசாலைகள் வங்கிகள் இயங்கவில்லை

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ். மாவட்டத்திலுள்ள பெரும்பாலான பாடசாலைகள், வங்கிகள் என்பன நேற்று இயங்கவில்லை.

பாடசாலைகளுக்கு வந்த மாணவர்கள் உடனேயே தமது வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர்.

நிலைமை வழமைக்கு திரும்பிய பின்னரே வங்கிகள் தமது சேவைகளை ஆரம்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-6)

## கூட்டுறவாளர் மாவீரர் நாள்

யாழ்-மாவட்ட கூட்டுறவாளர் மாவீரர் வார நிகழ்ச்சித்தொடரில் யாழ்-கோட்ட நிகழ்ச்சிகள் இன்று பகல் ஒரு மணிக்கு யாழ்-இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகின்றன.

காலை 9.30 மணிக்கு வீதி உலா இடம்பெறும். [ஒ-8]

## இரவில் நடந்த ஹெலித் தாக்கு

யாழ்ப்பாணம், நவ. 21

நேற்று முன்தினம் [திங்கள்] இரவு அளவெட்டி, அம்பனை, தெல்லிப்பழை பகுதிகளில் ஹெலி தாக்குதல்களை நடத்தியது.

இதனால் இப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பெரும் பதற்றமடைந்துள்ளனர். (ஒ-3)

## இலட்சியம் நிறை.....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

னுயிரை அர்ப்பணித்துள்ள இந்த மகத்தான தியாகிகள் காலம் காலமாக எமது இதயக் கோவிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள்.

ஒரு விடுதலை வீரன் சாதாரண வாழ்க்கையை வாழும் ஒரு சாதாரண மனிதப் பிறவி அல்ல. அவன் ஓர் இலட்சியவாதி; ஓர் உயரிய இலட்சியத்திற்காக வாழ்பவன்; தனக்காக வாழாமல் மற்றவர்களுக்காக வாழ்பவன்; மற்றவர்களின் விடிவுக்காக, விமோசனத்திற்காக வாழ்பவன்; சுயநலமற்ற, பற்றற்ற அவனது வாழ்க்கை உன்னதமானது; அர்த்தமானது; சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கத் துணிகிறான். எனவே, விடுதலை வீரர்கள் அபூர்வமான மனிதப் பிறவிகள்; அசாதாரணமான பிறவிகள்.

### சரித்திர நிகழ்வு

ஒரு விடுதலை வீரனின் சாவு ஒரு சாதாரண மரண நிகழ்வு அல்ல; அந்தச் சாவு ஒரு சரித்திர நிகழ்வு; ஓர் உன்னதமான இலட்சியம் உயிர்பெறும் அற்புதமான நிகழ்வு; உண்மையில் ஒரு விடுதலைவீரன் சாவதில்லை. அவனது உயிராக இயங்கி வந்த இலட்சியத் தீ என்றுமே அணைந்துவிடுவதில்லை. அந்த இலட்சிய நெருப்பு ஒரு வரலாற்றுச் சக்தியாகமற்றவர்களைப் பற்றிக்கொள்கிறது. ஓர் இனத்தின் தேசிய ஆன்மாவை தட்டி எழுப்பி விடுகிறது.

### உலக வரலாற்றில் முக்கிய இடம்

தமிழீழ சுதந்திரப் போர் இன்று ஆசியாக் கண்டத்தின் முதன்மையான விடுதலைப் போராட்டமாக சர்வதேசப் புகழடைந்திருக்கிறது. மூன்றாம் உலகின் ஒடுக்கப்படும் இனங்களுக்கும், அடக்கப்படும் மக்களுக்கும் எமது புரட்சிகர ஆயுதப் போராட்டம் ஒரு முன்னுதாரணமாக, வழிகாட்டியாக அமைந்திருக்கிறது.

சிங்கள ஆயுதப் படைகளையும் உலகின் மிகப் பெரிய இந்தியப் படைகளையும் தனித்து நின்று போராடி எமது மாவீரர்கள் படைத்த மகத்தான சாதனைகள் இன்று உலக வரலாற்றில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது.

நீண்டதும், கடினமானதும், அபாயகரமானதுமான இந்த யுத்தங்களில் எமது விடுதலை வீரர்கள் சந்தித்த இன்னல்களை, இடையூறுகளை, துன்பங்களை எழுதி விவரிக்க முடியாது. இரும்பை ஒத்த இலட்சிய உறுதியுடன், எதையும் தாங்கும் இதயத்துடன், சாவுக்கு அஞ்சா வீரத்துடன் எமது வீரர்கள் போராடினார்கள்; போர்க்களத்தில் வீர மரணத்தைத் தழுவினார்கள்.

### உறுதிக்கு உரமூட்டும் இழப்புகள்

நான் உயிருக்கு உயிராக நேசித்த தோழர்கள், என்னுடன் தோளோடு தோள் நின்று போராடிய தளபதிகள், நான் பல்லாண்டு காலமாக வளர்த்தெடுத்த போராளிகள் களத்தில் வீழ்ந்த போதெல்லாம் எனது இதயம் வெடிக்கும். ஆயினும் சோகத்தால் நான் சோர்ந்து போவதில்லை. இந்த இழப்புகள் எனது இலட்சிய உறுதிக்கு மேலும் மேலும் உரமூட்டி இருக்கிறது.

இந்த மாவீரர்களை நான் கௌரவிக்கின்றேன்.

அவர்களுக்குச் சிரம் தாழ்த்தி வணக்கம் செலுத்துகிறேன். அவர்களது தியாகத்தையும் வீரத்தையும், விடுதலைப் பற்றையும் எண்ணிப் பார்க்கும்போது எனது உள்ளம் பெருமை கொள்கிறது.

இந்த மண்ணின் மைந்தர்களைப் பெற்றெடுத்த பெற்றோர்களையும் நான் போற்றுகிறேன்.

உங்களது குழந்தைகள் தமது உயிருக்கும் மேலாக தமது தாய்நாட்டின் சுதந்திரத்தை நேசித்தார்கள். இந்த உத்தமமானவர்களை ஒரு புனித இலட்சியத்திற்கு உவந்தளித்த பெற்றோராகிய நீங்கள் நிச்சயம் பெருமை கொள்ளவேண்டும். உங்களது குழந்தைகள் சாகவில்லை; சரித்திரமாகிவிட்டார்கள். – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## 4 சிங்கள....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

303 ரக ரைபிள்கள் – 4, மகசின் – 4, 303 ரவை – 106. ஹோல்ஸர் – 1 ஆகியவை புலிகளினால் கைப்பற்றப்பட்டன.

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள எமது பகுதியில் சிங்கள ஊர்காவல் படை மீது தமிழ் ஊர்காவல் படை தாக்குதல் நடத்தியிருப்பது போராட்டத்தின் பரிணாம வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதாக இருக்கிறது"– இவ்வாறு அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. [உ]

## உணவு அதிகாரி திடீர் மரணம்

யாழ்-மாவட்ட உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியும், புனர்வாழ்வு இணைப்பதிகாரியுமான திரு. வே. நடேசபிள்ளை நேற்று மாலை திடீரென மரணமானார்.

நேற்று மாலை 3 மணியளவில்மாரடைப்புஏற்பட்டதும் யாழ்-போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்தில் அங்கு மரணமானார். (அ-3)

## மீண்டும் மீண்டும் வந்த...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

ராய் கிழக்கு, கோப்பாய் வீதியில் ஞானவைரவர் கோவிலுக்குச் சமீபமாக நடத்தப்பட்டது. இந்தப் பகுதியில் அடுத்தடுத்து பல குண்டுகள் வீசப்பட்டன. இந்தக் குண்டு வீச்சிலேயே வயோதிபத் தம்பதியர் பலியாகினர்.

ஓய்வுபெற்ற ஆசிரியரான தம்பாபிள்ளை சந்திரசேகரம் (83வயது) அவரது மனைவியான சோதிராணி சந்திரசேகரம் (76 வயது ஆகியோரே உயிரிழந்த இருவருமாவர்.

உரும்பராய் சந்திக்கு தெற்கேயும், கற்பகப்பிள்ளையார் மேற்குப் புறமாகவும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இப்பகுதிகளிலும் விடுகள் பல சேதமடைந்தன. பயன்தரு மரங்கள் பல நாசமாகின.

### இரண்டாவது தாக்குதல்

இரண்டாவது தாக்குதல் ஞானவைரவர் கோயிலுக்கு வடக்கே கலாசார மண்டபத்திற்கு சமீபமாகவும் கோப்பாய் வீதியிலுள்ள சிவன் வீதிப் பகுதியிலும் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் தாக்குதலினால் பிரதேசசபை உப அலுவலகம் பலத்த சேதமடைந்தது. வீடுகள் சிலவும் சேதமுற்றன. சிவகுருநாதன் கிறிகுமார் (வயது 16) என்பவர் சிறு காயங்களுக்கு இலக்கானார்.

### மூன்றாவது தாக்குதல்

மூன்றாவது தாக்குதல் ஏற்கனவே குண்டு வீச்சுக்கள் நடத்தப்பட்ட பகுதிகளில் மீண்டும் இடம்பெற்றது.

அப்போது சிவரத்தினம் பாக்கியரத்தினம் (வயது-66) என்ற வயோதிபப் பெண் படுகாயமுற்றார்.

நேற்றைய குண்டு வீச்சுக்களில் உரும்பராய்ப் பகுதியில் பசுமாடு ஒன்று, ஆடுகள், கோழிகள் பல கொல்லப்பட்டன. (ஒ-154-5-15-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 21 - 11 - 1990 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org